ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 257) Nov (2) / 2017



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு


1. லக்ஷ்மீ தந்த்ரம் ....................................................................................................3

2. ஸ்ரீபாஷ்யம் ……………………………………………………………………......5

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ………………………………………………….………7

4. ஆசார்ய ஹ்ருதயம்……………………………………………………………….10

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..……....……………………………………..17

6. இராமாநுச நூற்றந்தாதி.........……………………………………………………....24

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 77)

22-2. ஆதௌ மத்யே ததாந்தே ச த்ரிஷு வாந்யதரத்ர வா
23. ஏஷாம் பிண்ட: அதவா பீஜம் தே மந்த்ரா: ஸார்வகாலிகா:
பீஜாபாவே து மந்த்ராணாம் பீஜம் க்ருத்வாதிம் அக்ஷரம்
24-1. அநுஸ்வாரயுதம் பச்சாத் ஸகலம் மந்த்ர உச்யதே

**பொருள்** – ஒரு மந்த்ரத்தின் தொடக்கம், நடு, இறுதி ஆகிய மூன்று பகுதிகளிலும் பிண்டம் அல்லது பீஜம் இருந்தால், அந்த மந்த்ரமானது அனைத்து காலங்களிலும் உச்சரிக்க ஏற்றதாகும். ஒரு மந்த்ரத்தில் பீஜம் இல்லையென்றால், அந்த மந்த்ரத்தின் முதல் ஒலியுடன் "ம்" என்பதைச் சேர்த்து, அதனையே பீஜமாக அமைத்துக் கொள்ளவேண்டும். இப்படியாக அந்த மந்த்ரம் பீஜத்துடன் சேர்ந்து முழுமை அடைந்ததாகிறது.

24-2. ப்ரக்ரீடயந்தி புருஷம் மந்த்ரா ராகேண ரஞ்ஜிதம்
25. சதுர்தச விபாகஸ்தே ப்ராக்ருதே புவநாத்வநி
துர்யவர்ஜம் ஸுஷுப்த்யாத்யே ப்ராக்ருதே ச பதாத்வநி

**பொருள்** – பதினான்கு லோகங்கள் மற்றும் துர்ய நிலை தவிர மீதம் உள்ள ஸுஷுப்தி உள்ளிட்ட நிலைகள் ஆகியவற்றில் மந்த்ரங்களை ஆழ்ந்த ஈடுபாட்டுடன் உச்சரிக்கும்போது, அவை அந்த ஜீவாத்மாவிற்கு மிகுந்த மகிழ்வை ஏற்படுத்துகின்றன (அதாவது அந்த ஆத்மாவை களித்திருக்கும்படியாகச் செய்கின்றன).

26. ஆசார்ய த்ருஷ்டிபாதஸ்தம் புருஷம் ஸம்யதேந்த்ரியம்
ப்ரஸாதஸுமுகா மந்த்ரா உத்தார்ய புவநாத்வந:

27. பதாத்வநச்ச வைராக்யம் ஜநயந்த: பதே பதே
க்ரமாத் தத்வ கலாவர்ண பதவீஷு நயந்தி தம்

28. மாந்த்ரம் ப்ரஸாதமாஸாத்ய நிர்தூதாசேஷ பந்தந:
லக்ஷ்மீநாராயணாக்யம் தத்விசதி ப்ரஹ்ம சாச்வதம்

**பொருள்** – இவ்விதம் மகிழ்ந்த மந்த்ரங்கள், ஒருவனை நல்ல ஆசார்யனிடம் அழைத்துச் செல்கின்றன. அவனுடைய இந்த்ரியங்களை சமநிலையில் வைக்கின்றன. இந்த உலக விஷயங்களிலிருந்து அவனை உயர்த்துகின்றன. படிப்படியாக அவனுக்கு வைராக்யத்தை உண்டாக்குகின்றன. பின்னர் அவை அவனை தத்வம், கலை, வர்ணம் என்று ஒவ்வொரு நிலையாக இட்டுச் செல்கின்றன. இப்படியாக மந்த்ரங்கள் மூலமாக அனைத்தும் கிட்டப் பெற்ற பின்னர், இந்த பந்தங்கள் அனைத்தையும் நீக்கிக் கொண்டதைத் தொடர்ந்து, எப்போதும் நிலையாக உள்ள ப்ரஹ்மமாகிற லக்ஷ்மீநாராயணனை அடைகிறான்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்

ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 257)

## அதிகரணம் - 5 - தஹராதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** – தஹரம் என்னும் இடத்தில் (ஆகாசத்தில்) உள்ளவன் பரமாத்மாவே என்று நிரூபிக்கப்பட உள்ளது.

1-3-12 தஹர உத்தரேப்ய:

**பொருள்** - அடுத்து வரும் வரிகளால் கூறப்படும் காரணங்களால் தஹராகாசம் எனப்படுபவன் பரமாத்மாவே.

**விஷயம்** - சாந்தோக்யத்தில் (8-1-1) – அத யதிதம் அஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேச்ம தஹர: அஸ்மிந்நந்தர ஆகாச: தஸ்மிந் யதந்தஸ் தத் அந்வேஷ்டவ்யம் தத்வாவ விஜிஜ்ஞாஸிதவ்யம் - ப்ரஹ்மத்தின் இருப்பிடமான இந்தச் சரீரத்தில் தாமரை போன்று சிறியதான (இதயம்) இடம் உள்ளது. அதற்குள் ஸூக்ஷ்மமான ஆகாசம் உள்ளது. அதற்குள் இருப்பதே தேடப்பட்டு, புரிந்து கொள்ள வேண்டியதாகும் - என்று கூறப்பட்டுள்ளது. இங்கு எழும் சந்தேகம் - இதயத்தாமரையின் நடுவில் உள்ள தஹராகாசம் என்பது மஹாபூதங்களில் ஒன்றான ஆகாசமா? அல்லது ப்ரத்யகாத்மாவா (சரீரத்துடன் கூடிய ஜீவன்)? அல்லது பரமாத்மாவா? இதில் எது சரியானது?

**பூர்வபக்ஷம்** – இது மஹாபூதங்களில் ஒன்றான ஆகாசமாகவே இருக்க வேண்டும். எப்படி? ஆகாசம் என்ற சொல்லானது பஞ்சபூதங்களில் ஒன்றான ஆகாசம் மற்றும்

ப்ரஹ்மம் ஆகிய இரண்டையுமே குறிப்பதாக உள்ளபோதிலும், பூத ஆகாசத்திற்கே “ஆகாசம்” என்று பரவலாகக் கூறப்படும் வழக்கம் உள்ளது. மேலும் சாந். (8-1-1) – தஸ்மிந் யத் அந்தஸ் தத் அந்வேஷ்டவ்யம் - எது அதனுள் இருக்கிறதோ அதுவே தேடப்பட வேண்டியது - என்று கூறுவதால் தேடப்படும் பொருளுக்கு ஆதாரமாக உள்ளது என்பதாலும் பூத ஆகாசமே ஆகும்.

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன்
திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 257)

## பகவானுடைய ஆணையாகவும், ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் உள்ள கைங்கர்யங்களும் ப்ரபத்திக்கு அங்கம் அல்ல

**மூலம்** – இப்படி இவன் பகவதாஜ்ஞையாலே அநுஷ்டிக்கிற நித்ய நைமித்திகங்களும், பகவதநுஜ்ஞையாலே இவனுக்கப்பேே ப்ரயோஜநமாக அநுஷ்டிக்கிற ஏற்றமான கைங்கர்யங்களும் இப் ப்ரபத்தியோடு துவக்கற்று நின்ற நிலை "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்கிற விதாநத்தாலே ஸித்தமாயிற்று. "அத: சக்யாநி ஸர்வாணி ந ப்ரபத்த்யர்த்தம் ஆசரேத் | அசக்யேஷு ச ஸாமர்த்யம் ந ததர்த்தம் ஸமார்ஜயேத்".

**விளக்கம்** – பரமைகாந்திகளாக உள்ளவர்கள், நித்ய நைமித்திக கர்மங்களை ஸர்வேச்வரனுடைய கட்டளைகள் என்றே இயற்றுவார்கள். பகவானால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கர்மங்களை அவனுடைய மகிழ்ச்சிக்காகவே செய்வார்கள். ஆனால் இந்த இரண்டுமே ப்ரபத்தியுடன் எந்தவிதமான சம்பந்தமும் அற்றதாகவே இருக்கும் என்னும் நிலையானது "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்னும் விதி மூலம் உண்டாகிறது. அத: சக்யாநி ஸர்வாணி ந ப்ரபத்த்யர்த்தம் ஆசரேத் | அசக்யேஷு ச ஸாமர்த்யம் ந ததர்த்தம் ஸமார்ஜயேத் – ஆகவே ஒருவன் தன்னால் இயன்ற அனைத்தையும் ப்ரபத்தியின் அங்கமாக இயற்றுதல் கூடாது, தனக்குச் சக்தியில்லாத கர்மங்களை ப்ரபத்தியின் அங்கமாக எண்ணி கைக்கொள்ளுதலும் கூடாது.

**மூலம் –** இந்த யோஜநையில் அதிகாரமான ஆகிஞ்சந்யமும் "சோகியாதே கொள்" என்று தேற்றுகிற வாக்யத்தாலே ஸூசிதம். அநுவாத பக்ஷத்தில் தன் அசக்தியாலே கழிந்தவையொழிய, சக்யமாய்ச் செய்கிற ஆஜ்ஞாநுபாலநாதிகளும் ப்ரபத்தியில் துவக்கொண்ணா என்னுமிடம் "ஏக" சப்தத்திலே விவக்ஷிதமாகக் கடவது. இப்பக்ஷத்தில் "மா சுச:" என்கிற வாக்யம், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்று உக்தமான அதிகாரத்தை வ்யக்தமாக்கிக் கொண்டு மேலுள்ள நிர்பரத்வாதிகளை முன்னிட்டு உத்தரகாலத்தில் இருக்கக் கடவபடியையெல்லாம் உபலக்ஷிக்கிறது.

**விளக்கம் –** இவ்விதமாக "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்பதற்குப் பொருள் கொள்ளும்போது, "சரணம் அடைவதற்கு வேறு எந்தவிதமான உபாயத்தையும் கைக்கொள்ளும் சக்தி இல்லாமல் உள்ளேன்" என்பதான ஆகிஞ்சந்யமானது, "மா சுச: - சோகம் அடையாதே" என்பதன் மூலம், ப்ரபத்திக்குரிய அதிகாரத்தை ஏற்படுத்துவதை அறியலாம். மாறாக "பரித்யஜ்ய" என்பது முன்பே நடந்த ஒன்றைக் கூறுவதாகக் கொண்டால் (அதாவது வேறு உபாயத்தைக் கைக்கொள்ள இயலாத நிலை என்பதைக் கூறுவதாகக் கொண்டால்), தன்னுடைய சக்திக்கு ஏற்ப இல்லாதவை என்று தள்ளப்பட்டவை தவிர பகவானுடைய கட்டளைகளாக உள்ளவை மற்றும் அவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை ஆகியவையும் ப்ரபத்தியுடன் சம்பந்தம் அற்றவை என்பதை "ஏக" என்னும் என்னும் சொல் கூறுகிறது. இப்படியாகப் பொருள் கொண்டால், "மா சுச:" என்பது, "பரித்யஜ்ய" என்ற சொல் மூலம் கூறப்பட்டதான ப்ரபத்திக்கான அதிகாரம் (தகுதி) மற்றும் ப்ரபத்திக்குப் பின்னர் எந்தவிதமான பாரமும் இல்லாமல் இருத்தல் போன்றதான ப்ரபந்நனுடைய கைக்கொள்ளவேண்டிய தன்மைகளையும் கூறுவதாகிறது.

**மூலம் –** த்யாகவிதி பக்ஷத்துக்குப் ப்ரமாண விரோதம் வராதபடி இன்னமும் சில கதிகள் உண்டு. "ஆத்ம அசக்ய வ்ருதா ஆயாஸ நிவாரணம் இஹ அபி வா | லஜ்ஜா புரஸ்ஸர த்யாக வாத: அபி அத்ர நியம்யதாம்", "ஸ்வதுஷ்கரேஷு தர்மேஷு குச காச அவலம்பத: | ஆசா லேச அநுவ்ருத்தி: வா த்யாக உக்த்வா விநிவார்யதே", "அவிசிஷ்ட பலத்வேந விகல்போ யச்ச ஸூத்ரித: | தந்முகேந அபி ப்ரஹ்மாஸ்த்ர ந்யாய ஸூசநம்". அசக்யத்திலே ப்ரவ்ருத்தனை "தவிர்" என்கையும், தனக்கு துஷ்கரங்களாய்க் கழிந்து நிற்கிறவற்றிலே அபிநிவேசமுடையவனை "இது

வேண்டா" என்கையும், விகல்பித்த உபாயாந்தரங்களிலே ஒன்றை இங்கே கூட்டில் ப்ரஹ்மாஸ்த்ர ந்யாயத்தாலே விரோதிக்கும் என்று கழிக்கையும் விதி ப்ரகாரங்கள்.

**விளக்கம்** – துறத்தல் என்னும் விதிக்கு விரோதம் ஏற்படாதபடி "பரித்யஜ்ய" என்னும் பதத்திற்கு வேறு வழிகளிலும் பொருள் உரைக்கலாம். அவையாவன: ஆத்ம அசக்ய வ்ருதா ஆயாஸ நிவாரணம் இஹ அபி வா லஜ்ஜா புரஸ்ஸர த்யாக வாத: அபி அத்ர நியம்யதாம் – அல்லது "பரித்யஜ்ய" என்பதற்கு தன்னால் கைக்கொள்ள இயலாதபடி உள்ள பக்தியோகம் போன்றவற்றில் ஈடுபடவேண்டாம் என்று மறுப்பதும் பொருள் என்று கொள்ளலாம். இவ்விதம் கொள்ளும்போது, வெட்கம் காரணமாகக் கைவிடுவதும் அடங்கும் – என்றும், ஸ்வதுஷ்கரேஷு தர்மேஷு குச காச அவலம்பத: ஆசா லேச அநுவ்ருத்தி: வா த்யாக உக்த்வா விநிவார்யதே – வெள்ளத்தில் சிக்கிய ஒருவன் தர்ப்பை மற்றும் நாணல் ஆகியவற்றைப் பிடித்துக் கரையேற முயல்வது போன்று, தனக்கு இயலாத தர்மங்களில் ஈடுபட முயலுதலை "பரித்யஜ்ய" என்பது தடுப்பதாகவும் கொள்ளலாம் – என்றும், அவிசிஷ்ட பலத்வேந விகல்போ யச்ச ஸூத்ரித: தந்முகேந அபி ப்ரஹ்மாஸ்த்ர ந்யாய ஸூசநம் – உபநிஷத்துக்களில் கூறப்பட்டுள்ள முப்பத்து இரண்டு வித்யைகளும் ஒரே போன்று பலனை அளிப்பதால், அவற்றில் ஏதேனும் ஒன்றைக் கைக்கொள்ளுதலே போதுமானது என்று ப்ரஹ்மஸூத்ரம் கூறுகிறது. இவ்விதம் மற்ற வித்யைகளைக் கைக்கொண்டால், ப்ரஹ்மாஸ்த்ரம் போன்ற ப்ரபத்தி பயனற்றுப் போகும் என்பதையே "பரித்யஜ்ய" என்பதில் உள்ள துறத்தலானது தெரிவிக்கிறது – என்றும் கொள்க. ஆக இங்கு கூறப்படுவது என்னவென்றால் – தன்னால் இயலாத ஒன்றைச் செய்ய முயலும் ஒருவனைக் குறித்து "தவிர்ப்பாயாக" என்று தடுத்தல், தன்னால் இயலாது என்று அறிந்த பின்னரும் அவற்றில் ஈடுபட உறுதியாக உள்ளவனைக் குறித்து "இது வேண்டாம்" என்று கூறுதல், முக்தியை விரும்பும் ஒருவன் ப்ரபத்தி அல்லாமல் உள்ள மற்ற வித்யையில் ஏதேனும் ஒன்றைக் கைக்கொள்ள முயலும்போது, ப்ரஹ்மாஸ்த்ரம் போன்று ப்ரபத்தி பலனற்றுப் போகும் என்று கூறுதல் – ஆகும்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த

# ஆசார்ய ஹ்ருதயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 77(

**வ்யாக்யானம்** - (இந்த்ரியபல) "யததோஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபச்சித: இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந:" என்று இந்த்ரிய ப்ராபல்யத்தையும், … (இவரும்) "விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையுஞ் செறுமைம்புலன்" என்று இந்த்ரிய பலத்தையும். (மந: ப்ராதாந்ய) "சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம் தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்" என்றும், "அஸம்சயம் மஹோபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம் அப்யாஸேநது கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே" என்றும் மற்றை யிந்த்ரியங்களில் வைத்துக் கொண்டு மநஸ்ஸினுடைய ப்ராதாந்யத்தையும், … (இவரும்) "மனத்தை வலித்து" என்று மநோநியமநத்தினருமை சொல்லுகையாலே மந: ப்ராதாந்யத்தையும். (கரணநியமந) "தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத் மத்பர: வசே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா" என்றும், "ஸர்வத்வாராணி ஸம்யம்ய மநோ ஹ்ருதி நிருத்த்யச" என்றும் கரணநியமநத்தையும், … (இவரும்) "உள்ளமுரை செயலுள்ள விம்மூன்றையு முள்ளிக்கெடுத்து" என்று கரண நியமநத்தையும்.

**விளக்கம்** – (இந்த்ரிய பலம்) - கீதை (2-60) – யததோஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபச்சித: இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந: - பற்றுதல் அழியாத காரணத்தால், மனதைக் கலக்கும் இந்திரியங்களானவை, அறிவுள்ள மனிதனின் புத்தியையும் மனதையும் கூடக் கவர்ந்து இழுக்கின்றன - என்பதன் மூலம் இந்த்ரியங்களின் வலிமையைக் கூறியது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (7-1-6) - விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையும் செறும்

ஐம்புலன் - என்பதன் மூலம் இந்த்ரியங்களுடைய வலிமையை அருளிச்செய்தார். (மந: ப்ராதாந்ய) - கீதை (6-34) - சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம் தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் – க்ருஷ்ணா! இந்த மனம் எதிலும் நிலையாக நிற்பதில்லை. இந்த்ரியங்களை எளிதாக மயக்கவல்லது, உறுதியும் வலிமையும் கொண்டது, அதனை அடக்குவது என்பது காற்றை அடக்குவதைப் போன்று கடினமானது - என்றும், கீதை (4-35) - அஸம்சயம் மஹோபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம் அப்யாஸேநது கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே – இந்த மனம் சஞ்சலம் நிறைந்தது என்பதில் சந்தேகம் இல்லை. இதனை வசப்படுத்துவது கடினமே ஆகும். ஆனால் தொடர்ந்த பயிற்சி மற்றும் பற்றின்மை மூலம் இது வசப்படுத்தப்படுகிறது - என்றும் உள்ள ச்லோகங்கள் மூலம், மற்ற இந்த்ரியங்களைக் காட்டிலும் மனதிற்கு உள்ள முதன்மை கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (5-1-4) – மனத்தை வலித்து - என்பதன் மூலம், மனத்தை அடக்குவதில் உள்ள கடினத்தை உரைப்பதால் மனத்தின் முதன்மையை அருளிச்செய்தார் என்றாகிறது. (கரண நியமந) - கீதையில் (2-61) - தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத் மத்பர: வசே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டதா - அனைத்து புலன்களையும் தன்வசப்படுத்திய ஒருவன், என்னையே உயர்ந்த கதி என்று எண்ணியபடி த்யானித்தில் இருக்கவேண்டும்; காரணம் யார் ஒருவனுடைய இந்த்ரியங்கள் கட்டுப்பட்டு உள்ளனவோ அவனுடைய புத்தியானது ஸ்திரமாக உள்ளது - என்றும், கீதை (8-12) - ஸர்வத்வாராணி ஸம்யம்ய மநோ ஹ்ருதி ந்ருத்த்யச - ஞானத்தின் வழியாக உள்ள அனைத்து இந்த்ரியங்களையும் மற்ற விஷயங்களிருந்து விலக்கி - என்றும் உள்ள ச்லோகங்களால் கரணங்களை அடக்குதல் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (2-1-8) – உள்ளம் – என்பதன் மூலம், கரணங்களை அடக்குவது குறித்து அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - (ஸுக்ருதிபேத) “சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந, ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுர் அர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப” என்று ஸுக்ருதிகளுடைய பேதத்தையும், … (இவரும்) “பொருநாடு காணவிம்மையிலே பிச்சைதாங் கொள்வர்” என்கையாலே ஆர்த்தனான ப்ரஷ்டைச்வர்ய காமன், “இறுகலிறப்பென்னும்” என்கையாலே ஜிஜ்ஞாஸுவான

கேவலன், “குணங்கொள் நிறைபுகழ் மன்னர்” இத்யாதியாலே அர்த்தார்த்தியான அபூர்வைச்வர்ய காமன், “திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மின்” என்கையாலே ஜ்ஞாநியாகிற பகவச்சரணார்த்தி என்கிற ஸுக்ருதி பேதத்தையும். (தேவஸுர விபாக) “த்வெள பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச”, “தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயா ஸுரீமதா” என்று தேவாஸுர விபாகத்தையும், … (இவரும்) “அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேல்” என்றும், “நண்ணாவசுரர் நல்லவமரர்” என்று தேவாஸுர விபாகத்தையும்.

**விளக்கம்** – (ஸுக்ருதிபேத) - கீதை (7-16) - சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந, ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுர் அர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப - அர்ஜுனா! தான் இழந்த செல்வத்தைப் பெற விரும்புகிறவன், கைவல்யத்தை விரும்புகிறவன், செல்வத்தைப் புதிதாக அடைய விரும்புகிறவன், என்னைக் குறித்து அறிய விரும்புகிறவன் ஆகிய நான்குவிதமான மனிதர்கள் என்னை ஆராதிக்கிறார்கள் - என்று நன்மையுடன் கூடிய மனிதர்களில் உள்ள வேறுபாடு கூறுகிறது. இதனைப் போன்றே நம்மாழ்வாரால் திருவாய்மொழியில் (4-1-1) - பொருநாடு காணவிம்மையிலே பிச்சைதாங் கொள்வர் – என்பதன் மூலம் இழந்து செல்வத்தைப் பெறவிரும்பும் ஒருவனும், திருவாய்மொழி (4-1-10) - இறுகலிறப்பென்னும் - என்று கைவல்யத்தை விரும்பும் ஒருவனும், திருவாய்மொழி (4-1-8) - குணங்கொள் நிறைபுகழ் மன்னர் - என்று புதிய செல்வத்தை விரும்பும் ஒருவனும், திருவாய்மொழி (4-1-1) – திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மின் - என்று பகவானைச் சரணம் புகுந்த ஞானியும் கூறப்பட்டனர். (தேவாஸுர விபாக) - கீதையில் (16-6) - த்வெள பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச - இந்த உலகில் தெய்வப்பண்புகள் கொண்டவர்கள், அசுரப்பண்புகள் கொண்டவர்கள் என இருவிதமான பிறவிகள் உண்டு - என்றும், கீதை (16-5) - தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயா ஸுரீமதா - தெய்வப்பண்பு மோக்ஷத்திற்கும், அசுரப் பண்பு பந்தம் என்ற தாழ்ந்த நிலைக்கும் காரணமாகிறது - என்றும் உள்ள ச்லோகங்களால் தேவர்கள் மற்றும் அசுரர்கள் ஆகியவர்களுக்கு இடையே உள்ள வேறுபாடு கூறப்படுகிறது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (5-2-5) - அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேல் - என்றும், திருவாய்மொழி

(10-7-5) - நண்ணாவசுரர் நல்லவமரர் - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் தேவர்கள் மற்றும் அஸுரர்கள் ஆகியோரின் வேறுபாட்டை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - (விபூதியோக) “ஹந்த தே கதயிஷ்யாமி விபூதீராத்ம நச்சுபா: ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே”, “ஆதித்யாநாமஹம் விஷ்ணு: ஜ்யோதிஷாம் ரவிரம்சுமாந்” இத்யாதியாலே விபூதியோகத்தையும், … (இவரும்) “புகழுநல்லொருவன்”, “நல்குரவும்”, “மாயாவாமனன்” இவைகளிலே விபூதியோகத்தையும். (விச்வரூப தர்சந) “பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே ஸர்வாம்ஸ்ததா பூதவிசேஷ ஸங்காந் ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்த்தம் ருஷீம்ச்ச ஸர்வாநுரகாம்ச்ச தீப்தாந்” இத்யாதியாலே விச்வரூப தர்சநத்தையும், … (இவரும்) “நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய் சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாயயனானாய்” என்று விச்வரூப தர்சனத்தையும். (ஸாங்க பக்தி) “மந்மநா பவ மத் பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண:” என்று அங்க ஸஹிதையான பக்தியையும், … (இவரும்) “வணக்குடைத் தவ நெறி வழி நின்று புறநெறி களைகட்டுணக்குமின் பசையற” என்றும், “மேவித்தொழுதுய்ம்மினீர்கள் வேதப்புனிதவிருக்கை நாவிற் கொண்டச்சுதன் தன்னை ஞானவிதி பிழையாமே” என்றும், “மாலை நண்ணி காலை மாலை கமல மலரிட்டு தொழுதெழுமினோ” என்றும் ஸாங்க பக்தியையும்.

**விளக்கம்** - (விபூதி யோக) – கீதையில் (10-19) – ஹந்த தே கதயிஷ்யாமி விபூதீராத்ம நச்சுபா: ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே – குருவம்சத்தில் வந்தவனே! எனது விபூதிகள் தெய்வீகமானவை ஆகும். அவற்றில் சிலவற்றை உனக்கு உரைக்கிறேன்; காரணம் அவற்றுக்கு முடிவு என்பது இல்லை - என்றும், கீதை (10-21) – ஆதித்யாநாமஹம் விஷ்ணு: ஜ்யோதிஷாம் ரவிரம்சுமாந் – பன்னிரண்டு ஆதித்யர்களில் நான் விஷ்ணுவாகவும், இருளைப் போக்கும் பொருள்களில் நான் சூரியனாகவும் உள்ளேன் - என்றும் உள்ள ச்லோகங்கல் மூலம் விபூதியோகம் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (3-4-1) – புகழுநல்லொருவன் - என்றும், திருவாய்மொழி (6-3-1) - நல்குரவும்- என்றும், திருவாய்மொழி (7-8-1) – மாயாவாமனா - என்றும் உள்ள திருவாய்மொழிகளில் விபூதியோகத்தை அருளிச்செய்தார். (விச்வரூப தர்சநம்) -

கீதையில் (11-5) - பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே ஸர்வாம்ஸ்ததா பூதவிசேஷ ஸங்காந் ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்த்தம் ருஷீம்ச்ச ஸர்வாநுரகாம்ச்ச தீப்தாந் - க்ருஷ்ணா! உனது திருமேனியில் நான் அனைத்து தேவர்களையும், அனைத்து உயிரினங்களையும், தாமரையில் வீற்றுள்ள நான்முகனையும், சிவனையும், அனைத்து ரிஷிகளையும், ஸர்ப்பங்களையும் காண்கிறேன் - என்பது போன்ற ச்லோகங்களால் விச்வரூப தரிசனம் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (6-9-1) நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய் சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாய் அயனானாய் - என்பதன் மூலம் விச்வரூப தரிசனத்தை உரைத்தார். (ஸாங்க பக்தி) - கீதையில் (9-34) - மந்மநா பவ மத் பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண: - என்னிடமே மனதை நிலைநிறுத்துவாயாக; எனது பக்தனாக இருப்பாயாக; என்னை வணங்கி, பஜித்து, மனம் மற்றும் இந்த்ரியங்களுடன் கூடிய உனது சரீரத்தை என்னிடமே ஈடுபடுத்தி, நீ சரணம் அடையத்தக்க ஒரே இடம் என்று என்னையே கொள்வாயாக - என்பதன் மூலம் தகுந்த அங்கங்கள் கொண்ட பக்தி கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (1-3-5) - வணக்குடைத் தவ நெறி வழி நின்று புறநெறி களைகட்டுணக்குமின் பசையற - என்றும், திருவாய்மொழி (5-2-9) - மேவித்தொழுதுய்ம்மினீர்கள் வேதப்புனிதவிருக்கை நாவிற் கொண்டச்சுதன் தன்னை ஞானவிதி பிழையாமே - என்றும், திருவாய்மொழி (9-10-1) – மாலை நண்ணி காலை மாலை கமல மலரிட்டு தொழுதெழுமினோ - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் அங்கங்களுடன் கூடிய பக்தியை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம் -** (ப்ரபத்தி த்வைவித்யாதி) “தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா, மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே”, “தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத” என்று அங்கத்வேநவும், “ஸர்வதர்மாந் பரித்யஜ்ய” இத்யாதியாலே ஸ்வதந்த்ரத்வேநவு மிரண்டுபடியான ப்ரபத்த்யுபதேசத்தைப் பண்ணினாப்போலே … (இவரும்) “அவனுடையுணர்வும் கொண்டுணர்ந்து” என்று அவனருளிச்செய்த ப்ரபத்திரூப ஜ்ஞாநத்தை ஸஹாயமாகக் கொண்டு அத்தையறிந்தென்கையாலே பக்த்யங்கத்வேநவும் “மற்றோன்றில்லை”, “சரணமாகும்” என்கிறவற்றாலே ஸ்வதந்த்ரத்வேநவும் இரண்டு வகையான

ப்ரபத்தியையு முபதேசிக்கையாலே ஏதத் ப்ரதியார்த்த ஸாம்யத்தைக் கொண்டு "மாயனன்றோதிய வாக்கு" என்கிற ஸ்ரீகீதையோடொக்கச் சொல்லப்படுமென்கை. "ப்ரபத்தி த்வைவித்யாதிகளாலே" என்கிறவிடத்தில் ஆதிசப்தத்தாலே "ஜந்ம கர்மசமே திவ்யமேவம் யோவேத்தி தத்வத: த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந" என்றாப்போலே, "இவை பத்தும் வல்லாரமரரோடுயர்விற் சென்றறுவர் தம் பிறவியஞ்சிறை" என்று சொன்ன அவதார ரஹஸ்ய வைபவம், "பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, ததஹம் பக்த்யுபஹ்ருத மச்நாமி ப்ரயதாத்மந:" என்றாப்போலே "பிரிவகையின்றி நன்னீர் தூய்ப்புரிவதுவும் புகைபூ" என்று சொன்னவவன் ஸ்வாராததை முதலாகக் கீழநுக்தங்களையும், தேஹாத்மாபிமாநிகளை க்ரமத்திலே ப்ராப்ய ஸாதநங்களி னெல்லையிலே மூட்டுகையும், ஸாத்யோபாயங்களிலே பரந்து ஸித்தோபாயத்தை மறைத்து உபதேசிக்குமிடத்தில் வைபவம் தோற்ற வெளியிடுகையுமானவற்றையும் நினைக்கிறது.

**விளக்கம்** - (ப்ரபத்தி த்வைவித்யம்) – கீதையில் (7-14) – தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா, மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே - அந்த உலகில் உள்ள அனைத்திற்கும் அப்பாற்பட்டதும், மூன்று குணமயமாக உள்ளதும் ஆகிய எனது மாயையானது கடப்பதற்கு அரிதே ஆகும்; யார் என்னைச் சரணம் புகுகிறார்களோ அவர்கள் இந்த மாயையை எளிதாகக் கடக்கிறார்கள் - என்றும், கீதை (18-62) - தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத – அனைத்துவிதங்களிலும் ஸர்வேச்வரனைக் காரணம் அடைவாயாக - என்றும் உள்ள ச்லோகங்கள் மூலம் அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியும், கீதை (18-66) - ஸர்வதர்மாந் பரித்யஜ்ய – அனைத்து தர்மங்களையும் துறந்து - என்பதன் மூலம் சுதந்திரமானவன் என்பதை விடுத்த ப்ரபத்தியும் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (1-3-5) – அவனுடையுணர்வும் கொண்டுணர்ந்து - என்று அவன் அருளிச்செய்த ப்ரபத்தி குறித்த ஞானத்தைத் துணையாகக் கொண்டு, அதனை அறிதல் என்பதால் பக்திக்கு அங்கமாக உள்ள ப்ரபத்தியையும்; திருவாய்மொழி (9-1-7) – மற்றொன்றில்லை - என்றும், திருவாய்மொழி (9-10-5) – சரணமாகும் – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் சுதந்திர ப்ரபத்தியையும் அருளிச்செய்தார். ஆக இப்படியாக நான்முகன் திருவந்தாதி (71) - மாயனன்றோதிய வாக்கு - என்பதற்கு

ஏற்ப ஸ்ரீமத்பகவத்கீதையுடன் ஒன்றாகக் கூறப்படுகிறது. "ப்ரபத்தித்வைவித்யாதிகளாலே" என்பதில் உள்ள "ஆதி" என்ற பதம் மூலம் கீதையில் (4-9) - ஜந்ம கர்மசமே திவ்யமேவம் யோவேத்தி தத்வத: த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந அர்ஜுனா! - எனது பிறப்பு மற்றும் செய்கை தெய்வீகமானவை ஆகும். அவற்றில் களங்கம் ஏதும் இல்லை. இவ்விதம் யார் அறிகிறானோ அவன் சரீரத்தை துறந்த பின்னர் மீண்டும் ஒரு பிறவியை அடையாமல் என்னையே அடைகிறான் - என்று கூறப்பட்டது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் (1-3-11) – இவை பத்தும் வல்லாரமரரோடுயர்விற் சென்றறுவர் தம் பிறவியஞ்சிறை - என்பதன் மூலம் அவனுடைய அவதார ரஹஸ்யம் குறித்து உரைத்தார் என்பதும்; கீதையில் (9-26) - பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, ததஹம் பக்த்யுபஹ்ருதமச்நாமி ப்ரயதாத்மந: - யார் எனக்கு பக்தியுடன் இலை, மலர், பழம், தண்ணீர் போன்றவற்றைச் சமர்ப்பிக்கிறானோ, பக்தியுடன் பலன் எதிர்பாராமல் அளிக்கப்பட்ட அவற்றை நான் ப்ரியத்துடன் ஏற்கிறேன் - என்று கூறப்பட்டது போன்று நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் (1-6-1) - பிரிவகையின்றி நன்னீர் தூய்ப்புரிவதுவும் புகை பூ - என்பதன் மூலம் எளிதாக ஆராதிக்கப்படக்கூடிய விதமாக அவன் உள்ளான் என்பதும் கூறப்பட்டது. மேலும் சரீரத்தையே ஆத்மா என்று எண்ணியுள்ள ஸம்ஸாரிகளைச் சரியான வழியில் தகுந்த பேற்றினை அடைய வைக்கும் சாதனங்களில் ஈடுபடுத்துதல் மற்றும் ஸாத்ய உபாயங்களில் நிலை நின்று, ஸித்தோபாயத்தை மறைத்து உபதேசிக்கும் இடத்தில் வைபவத்தை வெளிப்படும்படியாக உரைத்தல் ஆகியவை காண்க.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

...தொடரும்

**ஸ்ரீ:**
**ஸ்ரீமதே ராமானுஜாய நம:**

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 222)

**வ்யாக்யானம் -** (இந்த்ரியபல) "யததோஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபச்சித: இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந:" என்று இந்த்ரிய ப்ராபல்யத்தையும், … (இவரும்) "விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையுஞ் செறுமைம்புலன்" என்று இந்த்ரிய பலத்தையும். (மந: ப்ராதாந்ய) "சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம் தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்" என்றும், "அஸம்சயம் மஹோபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம் அப்யாஸேநது கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே" என்றும் மற்றை யிந்த்ரியங்களில் வைத்துக் கொண்டு மநஸ்ஸினுடைய ப்ராதாந்யத்தையும், … (இவரும்) "மனத்தை வலித்து" என்று மநோநியமநத்தினருமை சொல்லுகையாலே மந: ப்ராதாந்யத்தையும். (கரணநியமந) "தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத் மத்பர: வசே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டதா" என்றும், "ஸர்வத்வாராணி ஸம்யம்ய மநோ ஹ்ருதி நிருத்த்யச" என்றும் கரணநியமநத்தையும், … (இவரும்) "உள்ளமுரை செயலுள்ள விம்மூன்றையு முள்ளிக்கெடுத்து" என்று கரண நியமநத்தையும்.

**விளக்கம் –** (இந்த்ரிய பலம்) - கீதை (2-60) – யததோஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபச்சித: இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந: - பற்றுதல் அழியாத காரணத்தால், மனதைக் கலக்கும் இந்திரியங்களானவை, அறிவுள்ள மனிதனின் புத்தியையும் மனதையும் கூடக் கவர்ந்து இழுக்கின்றன - என்பதன் மூலம் இந்த்ரியங்களின் வலிமையைக் கூறியது. இது போன்றே நம்மாழ்வாரும்

திருவாய்மொழி (7-1-6) - விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையும் செறும் ஐம்புலன் - என்பதன் மூலம் இந்த்ரியங்களுடைய வலிமையை அருளிச்செய்தார். (மந: ப்ராதாந்ய) - கீதை (6-34) - சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம் தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் – க்ருஷ்ணா! இந்த மனம் எதிலும் நிலையாக நிற்பதில்லை. இந்த்ரியங்களை எளிதாக மயக்கவல்லது, உறுதியும் வலிமையும் கொண்டது, அதனை அடக்குவது என்பது காற்றை அடக்குவதைப் போன்று கடினமானது - என்றும், கீதை (4-35) - அஸம்சயம் மஹோபாஹோ மநோ துர்நிக்ரஹம் சலம் அப்யாஸேநது கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே – இந்த மனம் சஞ்சலம் நிறைந்தது என்பதில் சந்தேகம் இல்லை. இதனை வசப்படுத்துவது கடினமே ஆகும். ஆனால் தொடர்ந்த பயிற்சி மற்றும் பற்றின்மை மூலம் இது வசப்படுத்தப்படுகிறது - என்றும் உள்ள ச்லோகங்கள் மூலம், மற்ற இந்த்ரியங்களைக் காட்டிலும் மனதிற்கு உள்ள முதன்மை கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (5-1-4) – மனத்தை வலித்து - என்பதன் மூலம், மனத்தை அடக்குவதில் உள்ள கடினத்தை உரைப்பதால் மனத்தின் முதன்மையை அருளிச்செய்தார் என்றாகிறது. (கரண நியமந) - கீதையில் (2-61) - தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத் மத்பர: வசே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டதா - அனைத்து புலன்களையும் தன்வசப்படுத்திய ஒருவன், என்னையே உயர்ந்த கதி என்று எண்ணியபடி த்யானித்தில் இருக்கவேண்டும்; காரணம் யார் ஒருவனுடைய இந்த்ரியங்கள் கட்டுப்பட்டு உள்ளனவோ அவனுடைய புத்தியானது ஸ்திரமாக உள்ளது - என்றும், கீதை (8-12) - ஸர்வத்வாராணி ஸம்யம்ய மநோ ஹ்ருதி நிருத்த்யச - ஞானத்தின் வழியாக உள்ள அனைத்து இந்த்ரியங்களையும் மற்ற விஷயங்களிருந்து விலக்கி - என்றும் உள்ள ச்லோகங்களால் கரணங்களை அடக்குதல் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (2-1-8) – உள்ளம் – என்பதன் மூலம், கரணங்களை அடக்குவது குறித்து அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - (ஸுக்ருதிபேத) “சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந, ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுர் அர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப” என்று ஸுக்ருதிகளுடைய பேதத்தையும், … (இவரும்) “பொருநாடு காணவிம்மையிலே பிச்சைதாங் கொள்வர்” என்கையாலே ஆர்த்தனான

ப்ரஷ்டைச்வர்ய காமன், "இறுகலிறப்பென்னும்" என்கையாலே ஜிஜ்ஞாஸுவான கேவலன், "குணங்கொள் நிறைபுகழ் மன்னர்" இத்யாதியாலே அர்த்தார்த்தியான அபூர்வைச்வர்ய காமன், "திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மின்" என்கையாலே ஜ்ஞாநியாகிற பகவச்சரணார்த்தி என்கிற ஸுக்ருதி பேதத்தையும். (தேவஸுர விபாக) "த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச", "தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயா ஸுரீமதா" என்று தேவாஸுர விபாகத்தையும், ... (இவரும்) "அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேல்" என்றும், "நண்ணாவசுரர் நல்லவமரர்" என்று தேவாஸுர விபாகத்தையும்.

**விளக்கம்** – (ஸுக்ருதிபேத) - கீதை (7-16) - சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந, ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுர் அர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப - அர்ஜுனா! தான் இழந்த செல்வத்தைப் பெற விரும்புகிறவன், கைவல்யத்தை விரும்புகிறவன், செல்வத்தைப் புதிதாக அடைய விரும்புகிறவன், என்னைக் குறித்து அறிய விரும்புகிறவன் ஆகிய நான்குவிதமான மனிதர்கள் என்னை ஆராதிக்கிறார்கள் - என்று நன்மையுடன் கூடிய மனிதர்களில் உள்ள வேறுபாடு கூறுகிறது. இதனைப் போன்றே நம்மாழ்வாரால் திருவாய்மொழியில் (4-1-1) - பொருநாடு காணவிம்மையிலே பிச்சைதாங் கொள்வர் – என்பதன் மூலம் இழந்து செல்வத்தைப் பெறவிரும்பும் ஒருவனும், திருவாய்மொழி (4-1-10) - இறுகலிறப்பென்னும் - என்று கைவல்யத்தை விரும்பும் ஒருவனும், திருவாய்மொழி (4-1-8) - குணங்கொள் நிறைபுகழ் மன்னர் - என்று புதிய செல்வத்தை விரும்பும் ஒருவனும், திருவாய்மொழி (4-1-1) – திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மின் - என்று பகவானைச் சரணம் புகுந்த ஞானியும் கூறப்பட்டனர். (தேவாஸுர விபாக) - கீதையில் (16-6) - த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச - இந்த உலகில் தெய்வப்பண்புகள் கொண்டவர்கள், அசுரப்பண்புகள் கொண்டவர்கள் என இருவிதமான பிறவிகள் உண்டு - என்றும், கீதை (16-5) - தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயா ஸுரீமதா - தெய்வப்பண்பு மோக்ஷத்திற்கும், அசுரப் பண்பு பந்தம் என்ற தாழ்ந்த நிலைக்கும் காரணமாகிறது - என்றும் உள்ள ச்லோகங்களால் தேவர்கள் மற்றும் அசுரர்கள் ஆகியவர்களுக்கு இடையே உள்ள வேறுபாடு கூறப்படுகிறது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (5-2-5) - அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேல் - என்றும், திருவாய்மொழி

(10-7-5) - நண்ணாவசுரர் நல்லவமரர் - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் தேவர்கள் மற்றும் அஸுரர்கள் ஆகியோரின் வேறுபாட்டை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - (விபூதியோக) "ஹந்த தே கதயிஷ்யாமி விபூதீராத்ம நச்சுபா: ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே", "ஆதித்யாநாமஹம் விஷ்ணு: ஜ்யோதிஷாம் ரவிரம்சுமாந்" இத்யாதியாலே விபூதியோகத்தையும், ... (இவரும்) "புகழுநல்லொருவன்", "நல்குரவும்", "மாயாவாமனன்" இவைகளிலே விபூதியோகத்தையும். (விச்வரூப தர்சந) "பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே ஸர்வாம்ஸ்ததா பூதவிசேஷ ஸங்காந் ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்த்தம் ருஷீம்ச்ச ஸர்வாநுரகாம்ச்ச தீப்தாந்" இத்யாதியாலே விச்வரூப தர்சநத்தையும், ... (இவரும்) "நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய் சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாயயனானாய்" என்று விச்வரூப தர்சனத்தையும். (ஸாங்க பக்தி) "மந்மநா பவ மத் பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண:" என்று அங்க ஸஹிதையான பக்தியையும், ... (இவரும்) "வணக்குடைத் தவ நெறி வழி நின்று புறநெறி களைகட்டுணக்குமின் பசையற" என்றும், "மேவித்தொழுதுய்ம்மினீர்கள் வேதப்புனிதவிருக்கை நாவிற் கொண்டச்சுதன் தன்னை ஞானவிதி பிழையாமே" என்றும், "மாலை நண்ணி காலை மாலை கமல மலரிட்டு தொழுதெழுமினோ" என்றும் ஸாங்க பக்தியையும்.

**விளக்கம்** - (விபூதி யோக) – கீதையில் (10-19) – ஹந்த தே கதயிஷ்யாமி விபூதீராத்ம நச்சுபா: ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே – குருவம்சத்தில் வந்தவனே! எனது விபூதிகள் தெய்வீகமானவை ஆகும். அவற்றில் சிலவற்றை உனக்கு உரைக்கிறேன்; காரணம் அவற்றுக்கு முடிவு என்பது இல்லை - என்றும், கீதை (10-21) – ஆதித்யாநாமஹம் விஷ்ணு: ஜ்யோதிஷாம் ரவிரம்சுமாந் – பன்னிரண்டு ஆதித்யர்களில் நான் விஷ்ணுவாகவும், இருளைப் போக்கும் பொருள்களில் நான் சூரியனாகவும் உள்ளேன் - என்றும் உள்ள ச்லோகங்கல் மூலம் விபூதியோகம் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (3-4-1) – புகழுநல்லொருவன் - என்றும், திருவாய்மொழி (6-3-1) - நல்குரவும்- என்றும், திருவாய்மொழி (7-8-1) – மாயாவாமனா - என்றும் உள்ள திருவாய்மொழிகளில் விபூதியோகத்தை அருளிச்செய்தார். (விச்வரூப தர்சநம்) -

கீதையில் (11-5) - பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே ஸர்வாம்ஸ்ததா பூதவிசேஷ ஸங்காந் ப்ரஹ்மாணமீசம் கமலாஸநஸ்த்தம் ருஷீம்ச்ச ஸர்வாநுரகாம்ச்ச தீப்தாந் - க்ருஷ்ணா! உனது திருமேனியில் நான் அனைத்து தேவர்களையும், அனைத்து உயிரினங்களையும், தாமரையில் வீற்றுள்ள நான்முகனையும், சிவனையும், அனைத்து ரிஷிகளையும், ஸர்ப்பங்களையும் காண்கிறேன் - என்பது போன்ற ச்லோகங்களால் விச்வரூப தரிசனம் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (6-9-1) நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய் சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாய் அயனானாய் - என்பதன் மூலம் விச்வரூப தரிசனத்தை உரைத்தார். (ஸாங்க பக்தி) - கீதையில் (9-34) - மந்மநா பவ மத் பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண: - என்னிடமே மனதை நிலைநிறுத்துவாயாக; எனது பக்தனாக இருப்பாயாக; என்னை வணங்கி, பஜித்து, மனம் மற்றும் இந்த்ரியங்களுடன் கூடிய உனது சரீரத்தை என்னிடமே ஈடுபடுத்தி, நீ சரணம் அடையத்தக்க ஒரே இடம் என்று என்னையே கொள்வாயாக - என்பதன் மூலம் தகுந்த அங்கங்கள் கொண்ட பக்தி கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (1-3-5) - வணக்குடைத் தவ நெறி வழி நின்று புறநெறி களைகட்டுணக்குமின் பசையற - என்றும், திருவாய்மொழி (5-2-9) - மேவித்தொழுதுய்ம்மினீர்கள் வேதப்புனிதவிருக்கை நாவிற் கொண்டச்சுதன் தன்னை ஞானவிதி பிழையாமே - என்றும், திருவாய்மொழி (9-10-1) – மாலை நண்ணி காலை மாலை கமல மலரிட்டு தொழுதெழுமினோ - என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் அங்கங்களுடன் கூடிய பக்தியை அருளிச்செய்தார்.

**வ்யாக்யானம்** - (ப்ரபத்தி த்வைவித்யாதி) "தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா, மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே", "தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத" என்று அங்கத்வேநவும், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" இத்யாதியாலே ஸ்வதந்த்ரத்வேநவு மிரண்டுபடியான ப்ரபத்த்யுபதேசத்தைப் பண்ணினாப்போலே … (இவரும்) "அவனுடையுணர்வும் கொண்டுணர்ந்து" என்று அவனருளிச்செய்த ப்ரபத்திரூப ஜ்ஞாநத்தை ஸஹாயமாகக் கொண்டு அத்தையறிந்தென்கையாலே பக்த்யங்கத்வேநவும் "மற்றோன்றில்லை", "சரணமாகும்" என்கிறவற்றாலே ஸ்வதந்த்ரத்வேநவும் இரண்டு வகையான

ப்ரபத்தியையு முபதேசிக்கையாலே ஏதத் ப்ரதியார்த்த ஸாம்யத்தைக் கொண்டு "மாயனன்றோதிய வாக்கு" என்கிற ஸ்ரீகீதையோடொக்கச் சொல்லப்படுமென்கை. "ப்ரபத்தி த்வைவித்யாதிகளாலே" என்கிறவிடத்தில் ஆதிசப்தத்தாலே "ஜந்ம கர்மசமே திவ்யமேவம் யோவேத்தி தத்வத: த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந" என்றாப்போலே, "இவை பத்தும் வல்லாரமரரோடுயர்விற் சென்றறுவர் தம் பிறவியஞ்சிறை" என்று சொன்ன அவதார ரஹஸ்ய வைபவம், "பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, ததஹம் பக்த்யுபஹ்ருத மச்நாமி ப்ரயதாத்மந:" என்றாப்போலே "பிரிவகையின்றி நன்னீர் தூய்ப்புரிவதுவும் புகைபூ" என்று சொன்னவவன் ஸ்வாராததை முதலாகக் கீழநுக்தங்களையும், தேஹாத்மாபிமாநிகளை க்ரமத்திலே ப்ராப்ய ஸாதநங்களி னெல்லையிலே மூட்டுகையும், ஸாத்யோபாயங்களிலே பரந்து ஸித்தோபாயத்தை மறைத்து உபதேசிக்குமிடத்தில் வைபவம் தோற்ற வெளியிடுகையுமானவற்றையும் நினைக்கிறது.

**விளக்கம்** - (ப்ரபத்தி த்வைவித்யம்) – கீதையில் (7-14) – தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா, மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே - அந்த உலகில் உள்ள அனைத்திற்கும் அப்பாற்பட்டதும், மூன்று குணமயமாக உள்ளதும் ஆகிய எனது மாயையானது கடப்பதற்கு அரிதே ஆகும்; யார் என்னைச் சரணம் புகுகிறார்களோ அவர்கள் இந்த மாயையை எளிதாகக் கடக்கிறார்கள் - என்றும், கீதை (18-62) - தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத – அனைத்துவிதங்களிலும் ஸர்வேச்வரனைக் காரணம் அடைவாயாக - என்றும் உள்ள ச்லோகங்கள் மூலம் அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியும், கீதை (18-66) - ஸர்வதர்மாந் பரித்யஜ்ய – அனைத்து தர்மங்களையும் துறந்து - என்பதன் மூலம் சுதந்திரமானவன் என்பதை விடுத்த ப்ரபத்தியும் கூறப்பட்டது. இது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழி (1-3-5) – அவனுடையுணர்வும் கொண்டுணர்ந்து - என்று அவன் அருளிச்செய்த ப்ரபத்தி குறித்த ஞானத்தைத் துணையாகக் கொண்டு, அதனை அறிதல் என்பதால் பக்திக்கு அங்கமாக உள்ள ப்ரபத்தியையும்; திருவாய்மொழி (9-1-7) – மற்றொன்றில்லை - என்றும், திருவாய்மொழி (9-10-5) – சரணமாகும் – என்றும் உள்ள பாசுரங்கள் மூலம் சுதந்திர ப்ரபத்தியையும் அருளிச்செய்தார். ஆக இப்படியாக நான்முகன் திருவந்தாதி (71) - மாயனன்றோதிய வாக்கு - என்பதற்கு

ஏற்ப ஸ்ரீமத்பகவத்கீதையுடன் ஒன்றாகக் கூறப்படுகிறது. "ப்ரபத்தி த்வைவித்யாதிகளாலே" என்பதில் உள்ள "ஆதி" என்ற பதம் மூலம் கீதையில் (4-9) - ஜந்ம கர்மசமே திவ்யமேவம் யோவேத்தி தத்வத: த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந அர்ஜுனா! - எனது பிறப்பு மற்றும் செய்கை தெய்வீகமானவை ஆகும். அவற்றில் களங்கம் ஏதும் இல்லை. இவ்விதம் யார் அறிகிறானோ அவன் சரீரத்தை துறந்த பின்னர் மீண்டும் ஒரு பிறவியை அடையாமல் என்னையே அடைகிறான் - என்று கூறப்பட்டது போன்றே நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் (1-3-11) – இவை பத்தும் வல்லாரமரரோடுயர்விற் சென்றறுவர் தம் பிறவியஞ்சிறை - என்பதன் மூலம் அவனுடைய அவதார ரஹஸ்யம் குறித்து உரைத்தார் என்பதும்; கீதையில் (9-26) - பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, தததஹம் பக்த்யுபஹ்ருத மச்நாமி ப்ரயதாத்மந: - யார் எனக்கு பக்தியுடன் இலை, மலர், பழம், தண்ணீர் போன்றவற்றைச் சமர்ப்பிக்கிறானோ, பக்தியுடன் பலன் எதிர்பாராமல் அளிக்கப்பட்ட அவற்றை நான் ப்ரியத்துடன் ஏற்கிறேன் - என்று கூறப்பட்டது போன்று நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் (1-6-1) - பிரிவகையின்றி நன்னீர் தூய்ப்புரிவதுவும் புகை பூ - என்பதன் மூலம் எளிதாக ஆராதிக்கப்படக்கூடிய விதமாக அவன் உள்ளான் என்பதும் கூறப்பட்டது. மேலும் சரீரத்தையே ஆத்மா என்று எண்ணியுள்ள ஸம்ஸாரிகளைச் சரியான வழியில் தகுந்த பேற்றினை அடைய வைக்கும் சாதனங்களில் ஈடுபடுத்துதல் மற்றும் ஸாத்ய உபாயங்களில் நிலை நின்று, ஸித்தோபாயத்தை மறைத்து உபதேசிக்கும் இடத்தில் வைபவத்தை வெளிப்படும்படியாக உரைத்தல் ஆகியவை காண்க.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த

# இராமாநுச நூற்றந்தாதி

இதற்கு ஸ்வாமி பிள்ளைலோகம் ஜீயர் அருளிச் செய்த வ்யாக்யானம் மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 84)

79. பொய்யைச் சுரக்கும் பொருளைத் துறந்து இந்தப் பூதலத்தே
மெய்யைப் புரக்கும் இராமாநுசன் நிற்க வேறு நம்மை
உய்யக் கொள்ளவல்ல தெய்வம் இங்கு யாதென்று உலர்ந்து அவமே
ஐயப்படா நிற்பர் வையத்து உள்ளோர் நல்லறிவு இழந்தே

**விளக்கவுரை** - வேதங்களில் கூறியவற்றுக்கு மாறாக பொருள் உரைக்கும் அனைத்து மதங்களையும் தள்ளி, இந்த உலகத்தில் உண்மையான பொருளை உணர்த்தி, வேதமார்கத்தை நிலைநிறுத்தியவர் எம்பெருமானார் ஆவார். இப்படிப்பட்ட எம்பெருமானாரைத் தவிர நம்மைக் காக்கவல்லவர் வேறு யார் உள்ளனர்? இந்த உண்மையை அறியாமல் உள்ளவர்கள், இந்தப் பூமியில் வேறு ஏதோ ஒரு தேவதை தங்களைக் காப்பாற்றும் என்று தவறான எண்ணம் கொண்டு, அந்தத் தேவதையைத் தேடி அலைந்து, உடல் நொந்து நிற்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் தூய்மையான தங்கள் ஞானம் இழந்து, அந்தத் தேவதையும் கிடைக்கப் பெறாமல், எம்பெருமானாரின் உபதேசமும் வாய்க்கப் பெறாமல் சந்தேகத்துடன் உழல்கின்றனர்.

**அவதாரிகை** – கீழ்ப்பாட்டில் எம்பெருமானார் என்னுடைய மநோதோஷத்தைப் போக்கி, அது தன்னைத் திருத்தி, ஸம்யஜ்ஞானத்தை பிறப்பித்து, ஸ்ரீய:பதிக்கு சேஷமாக்கின பின்பு என்னுடைய மநஸ்ஸு வேறொருவரைத் தேடிப்போமோவென்று தம்முடைய அத்யாவஸாய தார்ட்யத்தை யருளிச்செய்து, இதிலே அந்தப்படியே ஸம்ஸாரி சேதநருக்கும் அத்யவஸிக்க ப்ராப்தமாயிருக்க

அது செய்யாதே, ஆத்மாவினுடைய தேஹ பரிமாணத்வம், க்ஷணிகத்வம் தொடக்கமான வேதாந்த விருத்தார்த்தங்களை வாய் வந்தபடி ப்ரலாபிக்கிற பாஹ்ய குத்ருஷ்டிகளுடைய மத ப்ரமேயத்தை வாஸனையோடே ஓட்டிவிட்டு, முன்பு அந்த மறைக்குறும்பாலே வ்யாப்தமான பூலோகத்திலே ஸத்யமான அர்த்தத்தை, எம்பெருமானா ரிருக்கச் செய்தேயும் ஸஜாதீய புத்தியாலே அவரை விட்டகன்று வேறொரு தேவதை நம்மை ரக்ஷிக்கக் கடவதுண்டோவென்னும் உள்வெதுப்பாலே சுஷ்கித்துப்போய் வ்யர்த்தமே ஸம்சயாத்மாக்களாய் நசித்துப் போகிறவர்கள் படியைக் கண்டு இன்னாதாகிறார்.

**விளக்கம் -** கடந்த பாசுரத்தில், "எம்பெருமானார் எனது மனதில் உள்ள பல தோஷங்களையும் போக்கி, மனதைத் திருத்தி, தெளிந்த அறிவை ஏற்படுத்தி, மஹாலக்ஷ்மியின் நாதனுக்கு அடிமையாக்கிய பின்னர், எனது மனம் வேறு யாரையும் தேடிச் செல்லுமோ என்று சந்தேகம் கொண்டவராக, தனது உள்ளத்தில் உள்ள உறுதியை அருளிச்செய்தார்", என்று கூறினார். இந்தப் பாசுரத்தில், "இப்படிப்பட்ட நிலையானது அனைத்து ஸம்ஸாரிகளுக்கும் கைக்கொள்ள தகுதியானதாக உள்ளபோதிலும், அதனை அவர்கள் செய்யவில்லை; மாறாக இவர்கள் செய்வது என்ன? ஆத்மாவானது சரீரத்தின் அளவு கொண்டது, அது நொடிக்கு நொடி அழிந்து அழிந்து உண்டாகிறது என்பது தொடங்கி, பலவிதமாகவும் வேதாந்தங்களுக்கு முரணாக, தங்களுடைய வாய்க்கு வந்தபடி உளறுகின்ற மற்ற மதங்களுடைய கருத்துக்களைக் கேட்கின்றனர். இப்படிப்பட்டவற்றை அவற்றின் வாசனையுடன் துறக்காமலும், அத்தகைய தாழ்ந்த கருத்துக்கள் பலவும் எங்கும் பரவி நிற்பதான இந்த பூலோகத்தில், எம்பெருமானர் உள்ளபோதிலும் அவரை விடுத்து, வேறு ஏதோ ஒரு தெய்வம் நம்மைக் காப்பாற்ற உள்ளதோ என்று தேடியபடியும் உள்ளனர். இப்படியாக உண்மையான ஞானம் பெறாமல் , சந்தேகத்தை மட்டுமே மனதில் எப்போதும் கொண்டவர்களாக, தங்களுடைய வாழ்க்கையை வீணாக்கியபடி உள்ளனரே", என்று இவர்களைக் குறித்து வருந்துகிறார்.

வ்யாக்யானம் – (பொய்யைச் சுரக்கும் பொருளைத் துரந்து) பொய் என்று அஸத்யம். (சுரக்கும் பொருளை) இத்தையே மேன்மேலும் உபபாதியா நிற்கிற

பாஹ்ய குத்ருஷ்டிகளுடைய மத ப்ரக்ரியையை, “அஸந்நேவ ஸ பவதி, அஸத் ப்ரஹ்மேதி வேதசேத்” என்கிறபடியே அஜ்ஞாநாந்யதாஜ்ஞாந விபரீத ஜ்ஞாந விஷயங்களை யென்றபடி. அவையாவன ஆத்மாவினுடைய தேஹ பரிமாணத்வ க்ஷணிகத்வ விஞ்ஞாந ரூபத்வ ஜடத்வாதிகளும், ப்ரஹ்மத்தினுடைய மாயாசபளி தத்வ உபாதி மிச்ரத்வ விகாராதிவாதிகளும், ஜகத்தினுடைய மித்யாத்வ அவித்யா கார்யத்வாதிகளும், இப்படி அஸத்யங்களாய் வேத விருத்தங்களான அர்த்தங்களை என்றபடி.

**விளக்கம் -** (பொய்யைச் சுரக்கும் பொருளைத் துரந்து) **-** பொய் என்றால் அஸத்யம். (சுரக்கும் பொருளை) **-** இதனையே மேன்மேலும் உரைத்தபடி நிற்கிற மற்ற தாழ்ந்த மதங்களுடைய பொய்யான ப்ரச்சாரங்களையும் செய்கைகளையும், தைத்திரீயம் – அஸந்நேவ ஸ பவதி அஸத் ப்ரஹ்ம இதி வேதசேத – ப்ரஹ்மம் இல்லை என்று எண்ணுபவன், இல்லாதவன் ஆகிறான் - என்பதற்கு ஏற்ப அறியாமை, ஒன்றை மற்றதாக அறிதல், தவறாக அறிதல் என்பதற்கு ஏதுவாக உள்ள விஷயங்களை என்று கருத்து. அவை எவையென்றால் - ஆத்மாவானது சரீரத்தின் அளவு கொண்டது, ஆத்மா நொடிக்கு நொடி அழியக்கூடியது, ஆத்மா ஞானமயம் மட்டுமே ஆகும், ஆத்மா ஜடத்வம் கொண்டது என்று பலவிதமாகக் கூறுபவர்கள்; ப்ரஹ்மமானது மாயை கொண்டது என்றும், உபாதி காரணமாகவே அது ஜீவாத்மாக உள்ளது என்றும், மாற்றம் கொண்டது என்றும் கூறுபவர்கள்; இந்த ஜகத்தானது மித்யை என்றும், அவித்யை காரணமாக இவ்விதம் தோன்றுகிறது என்றும் கூறுபவர்கள்; இப்படியாக வேதங்களுக்கு விரோதமாகப் பொருள் கூறுகின்ற பல கருத்துக்களை.

**வ்யாக்யானம் –** அன்றிக்கே, (பொய்யைச் சுரக்கும் பொருளை) “நாஸதோ வித்யதே பாவ:” என்கிறபடியே உத்பத்தி விநாசாதி யோகத்தாலே அஸத் சப்த வாச்யமான தேஹத்தை, ஜந்ம பரம்பரையாலே மேன்மேலுமுண்டாக்கும் தேஹாத்மாபிமாநம் ஸ்வஸ்வாதந்த்ர்யம் தொடக்கமான அர்த்தங்களை யென்றுமாம். (பொருளைத் துரந்து) இப்படிப்பட்ட அஸத்யமான அர்த்தங்களைத் திருநாராயணபுரத்திலும், ஸரஸ்வதீ பண்டாரத்திலும் “கோ வா சக்ஷு: உதஞ்சயேத் அபி புர: ஸாடோப தர்க்க சடா சஸ்த்ரா ஸசஸ்த்ரி விஹார ஸம்ப்ருத ரணா ஆஸ்வாதேஷு வாதேஷு ந:” என்கிறபடியே கரை கட்டாக் காவேரி போலே தடையறப் பெருகி வருகிற ஸத்

தர்க்கங்களாலே பாஹ்ய குத்ருஷ்டிகளுக்குக் கண் விழிக்கவொண்ணாதபடி அவர்களோடே பஹுமுகமாக ப்ரஸங்கித்து, சரீரமே ஆத்மாவாகில் ம்ருத சரீரத்திலும் சைதந்யமுண்டாக வேண்டி வரும் என்றும், ஆத்மா க்ஷணிகமாகில் பூர்வக்ஷணாது பூதங்களான ஸுகதுக்கங்களுக்கு உத்தர க்ஷணத்தில் ப்ரதிஸந்தாநம் வாராமல் போக வேண்டி வரும் என்றும், ஜ்ஞாநமே ஆத்மாவாகில் நானறிவென்றிருக்க வேண்டுமித்தனையொழிய நானறிந்தேனென்று ஜ்ஞாத்ருத்வேந
ப்ரதிஸந்தாநங் கூடாதென்றும்.

**விளக்கம்** – அல்லது, (பொய்யைச் சுரக்கும் பொருளை) என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். கீதை (2-16) – நாஸதோ வித்யதேபாவ: - இல்லாத ஒன்றுக்கு இருப்பு உண்டாகாது - என்பதற்கு ஏற்ப உற்பத்தி, அழிவு ஆகிய இரண்டும் சேர்ந்துள்ளதால் அஸத் என்று கூறப்படும் சரீரத்தை, மேன்மேலும் பிறவிகள் ஏற்பட்டபடி உள்ளதால் ஒவ்வொன்றிலும் அந்தச் சரீரமே ஆத்மா என்று எண்ணியும், இது சுதந்திரமானது என்று எண்ணியும் உள்ள நிலை; இப்படிப்பட்ட கருத்துக்களை. (பொருளைத் துரந்து) - இவ்விதம் அஸத்யமான கருத்துக்கள் பலவற்றையும் திருநாராயணபுரம், காஷ்மீரில் உள்ள ஸரஸ்வதி பண்டாரம் போன்ற இடங்களில், யதிராஜ ஸப்ததி (68) - ஆஸதாம் நாம யதீந்த்ர பத்ததி ஜுஷாம் ஆஜாந சுத்தா மதி: தத் அவ்யாஜ விதக்த முக்த மதுரம் ஸாரஸ்வதம் சாஸ்வதம் கோ வா சக்ஷு: உதஞ்சயேத் அபி புர: ஸாடோப தர்க்க சடா சஸ்த்ரா ஸசஸ்த்ரி விஹார ஸம்ப்ருத ரணா ஆஸ்வாதேஷு வாதேஷு ந: - யதிராஜரின் உயர்ந்த மார்க்கத்தை அடைந்தவர்கள் தாங்கள் பிறந்தது முதலே சரியான ஞானம் கொண்டவர்களாகவே உள்ளனர். அவர்களிடம் கம்பீரம், அழகு, இனிமை ஆகியவற்றுடன் கூடிய நிலையான கல்வி இயற்கையாகவே அமைந்துள்ளது. மிகுந்த தம்பட்டம் கொண்டு எதிர்வாதம் செய்தபடி மற்ற மதத்தினர் வாதப்போருக்கு வரக்கூடும். அவர்கள் முன்பு நாம் சுவையான யதிராஜரின் நூலகள் உதவியுடன் வாதம் செய்ய நின்றால், நமக்கு முன்பாகக் கண்ணைத் திறந்து பார்த்தபடியே யார் நிற்பார்கள் – என்பதற்கு ஏற்ப கரையில் அடங்காத காவேரி போன்று தடையில்லாமல் பெருகி வருகின்ற உண்மையான வாதங்கள் மூலம், இவ்விதம் தவறாகப் பொருள் கூறும் மற்ற மதங்கள் அனைத்தும் கண்விழிக்கக்கூட இயலாதபடி அவர்களுடன் பலவிதங்களில் வாதம் செய்து; சரீரமே ஆத்மா என்று கொண்டால் மரணம் அடைந்த நிலையில் உள்ள சரீரத்திலும் சைதந்யம் ஏற்படவேண்டும் என்றாகிவிடும் என்றும், ஆத்மா

நொடிக்கு நொடி அழிந்து தோன்றுகிறது என்றால் முந்தைய நொடியில் ஏற்பட்ட சுகதுக்கங்கள் குறித்து அடுத்த நொடியில் நினைவு வராமல் போய்விடும் என்றும், ஆத்மாவானது ஞானம் மட்டுமே என்றால் "நானே அறிவு" என்ற எண்ணம் தோன்ற வேண்டும் அல்லாமல் "நான் அறிந்தேன்" என்று அறிபவனாக உள்ள நிலை ஏற்படாது என்றும்,

**வ்யாக்யானம்** - ஆத்மா ஜடமென்றால் "ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ: இதி தத்வித:" என்கிறபடியே "பாதே மே வேதநா, சிரஸி மே ஸுகம்" என்றும், "விஜ்ஞாநகந:" என்று ஜ்ஞாந ஸ்வரூபமாகச் சொல்லக் கூடாது என்றும்; ப்ரஹ்மம் மாயாசபளிதமானாலும், "நிஷ்களம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம்" என்கிறபடியே நிர்மலாநந்தைக ஸ்வரூபமாகையாலே நான் ஜீவனென்றும் ஈச்வரனென்றும் ப்ரமிக்கக் கூடாதென்றும்; அப்படி ப்ரமித்தால், "ஏகோ தேவஸ் ஸர்வ பூதேஷு கூட:" என்கிறபடியே அத்விதீயனானவனுக்கு ப்ரம நிவர்த்தகரில்லாமையாலே ஸர்வதா ப்ரமித்தே போகவேண்டி வரும் என்றும்; ப்ரஹ்மம் விகாரியென்றால் நிர்விகாரியென்கிற ச்ருதியோடே விரோதம் ப்ரஸங்கிக்குமென்றும் அவர்களைக் குறித்து பஹுமுகமாக ப்ரதிகூல அர்த்தங்களைச் சொல்லி, அவர்களை சிக்ஷித்து பராஜிதராக்கி, இந்த மஹா ப்ருத்வியிலே யிருக்கக் கூடாமல், கடலிலே புகும்படி ஓட்டிவிட்டு. துரத்தல் – ஓட்டுதல்.

**விளக்கம்** - ஆத்மா ஜடப்பொருள் என்றால், கீதை (13-1) – ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ: இதி தத்வித: - இதனை அறிந்தவனை க்ஷேத்ரஜ்ஞன் என்று உண்மையை அறிந்தவர்கள் கூறுகிறார்கள் – என்பதற்கு ஏற்ப "எனது கால்கள் வலிக்கிறது, தலைவலி இன்றி சுகமாக உள்ளேன்" என்றும், விஜ்ஞாநகந: - என்றும் ஞானஸ்வரூபமாக ஆத்மாவை உரைக்க இயலாது என்றும்; ச்வேதாஸ்வதர உபநிஷத் (6-19) - நிஷ்களம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம் – களங்கம் அற்றது, செயல்கள் அற்றது, சாந்தமானது, தூய்மையானது, தோஷம் அற்றது - என்பதற்கு ஏற்ப தோஷம் ஏதும் இன்றி உள்ள ஆனந்தத்தை மட்டுமே தனது இயல்பாகக் கொண்டதால் "நான் ஜீவன், இச்சவரன்" என்று மயங்கி நிற்கக்கூடாது என்றும், அவ்விதம் மயங்கி நின்றால், ச்வேதாஸ்வதர உபநிஷத் - ஏகோ தேவஸ்

ஸர்வபூதேஷு கூட: - ஒரே தேவன் அனைத்து பூதங்களிலும் உள்ளான் – என்பதற்கு ஏற்ப தன்னைப் போன்று இரண்டாவது எதும் இல்லை என்பதால், ப்ரஹ்மத்திற்கு ஏற்பட்ட அந்த மயக்கத்தை விலக்குவதற்கு யாரும் இல்லை என்பதால், எப்போதும் மயக்கத்திலேயே இருக்கவேண்டிய நிலை ஏற்படும் என்றும்; ப்ரஹ்மம் மாறுபாடு அடைகிறது என்றால், ப்ரஹ்மத்தை மாறுபாடு அற்றது என்று கூறும் கருத்துக்களுடன் முரண்பாடு ஏற்படும் என்றும், இப்படியாக அவர்களைக் குறித்து பலவிதமான அவர்களுக்கு விருப்பம் அற்ற வாதங்களை உரைத்து, அவர்களைத் திருத்தி, அவர்கள் தோற்கும்படிச் செய்து, இந்தப் பெரிய உலகத்தில் அவர்கள் இருக்கமுடியாமல் கடலில் புகும்படி விரட்டி.

**வ்யாக்யானம் –** (இந்தப் பூதலத்தே மெய்யைப் புரக்கும்) யதாஜ்ஞாநத்தை இந்த பூதலத்திலே பரிபாலித்தருளும் சுஷ்க தர்க்கவாதிகளை ஓட்டிவிட்டு. "ப்ரமாணம் வேதாச்ச" என்றும், "ஆதௌ வேதா: ப்ரமாணம்" என்றும் சொல்லுகிறபடியே ஸகல ப்ரமாணமான வேதத்திலே வைத்துக் கொண்டு, "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்கையாலே ஸர்வேச்வரன் ஸ்வரூப விகாரத்வ ஜடத்வ த்ரிவித பரிச்சேத ரஹிதனென்றும், "கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்றும், "விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:" என்கையாலே சுபாச்ரய திவ்ய ரூபனென்றும்; "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியா ச" என்கையாலே ஸமஸ்த கல்யாண குணாத்மகன் என்றும்; "பாதோஸ்ய விச்வாபூதானி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்கையாலே உபயவிபூதி நாதனென்றும்; "ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்நயௌ" என்கையாலே திவ்யமஹிஷீ வல்லபனென்றும்; "யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா:" என்றும், "யத்ர ருஷய: ப்ரதமஜாயே புராணா:" என்றும், "ஏதத் ஸாமகாயாந் நாஸ்தே" என்கையாலே ஸூரிப்ருந்த பரிசார்யமாணனென்றும்.

**விளக்கம் -** (இந்தப் பூதலத்தே மெய்யைப் புரக்கும்) - உண்மையான ஞானத்தின் இந்த உலகத்தில் பாதுகாத்து. விரோதமான தர்க்கங்களைச் செய்பவர்களை விரட்டி. ஆபஸ்தம்ப ஸூத்ரம் - ப்ரமாணம் வேதாச்ச – வேதங்களே ப்ரமாணங்கள் – என்றும், ஆதௌ வேதா: ப்ரமாணம் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்துவிதமான ப்ரமாணமாகவும் உள்ள வேதத்தின் மூலம், ஸத்யம் ஜ்ஞாநம்

அநந்தம் ப்ரஹ்மம் – என்று கூறுவதால், ஸர்வேச்வரன் தனது ஸ்வரூபத்தில் மாற்றம் அடையாதவன் என்றும், ஜடப்பொருள் அல்லன் என்றும், இடம் காலம் தேசம் என்று மூன்றுவிதமான அளவும் அற்றவன் என்றும்; சாந்தோக்ய உபநிஷத் - கப்யாஸம் புண்டரீகமேவ அக்ஷிணீ – அன்றலர்ந்த தாமரைமலர் போன்ற திருக்கண்கள் – என்பதற்கு ஏற்பவும், ஸ்ரீவிஷ்ணு ஸூக்தம் - விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ: - மஹாவிஷ்ணுவின் திருவடிகள் அம்ருதம் என்னும் மது பொருந்தியவை – என்பதற்கு ஏற்பவும் மங்களங்கள் அனைத்தும் அண்டி நிற்கின்ற திவ்யரூபன் என்றும்; ச்வேதாஸ்வதர உபநிஷத் (6-8) - பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியா ச – பலவிதமான சக்திகள் உள்ளும்புறமும் இயங்கியபடி உள்ளன. இயல்பாகவே ஞானம், பலம் போன்றவை கொண்டு – என்பதற்கு ஏற்ப அனைத்துவிதமான திருக்கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாக உள்ளவன் என்றும்; புருஷஸூக்தம் - பாதோஸ்ய விச்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம்திவி – அவனுடைய திருவடிகளில் கால்பாகம் லீலாவிபூதியிலும், முக்கால் பாகம் நித்யவிபூதியிலும் உள்ளன – என்பதால் இரண்டு விபூதிகளுக்கும் நாதன் என்றும்; புருஷஸூக்தம் - ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ – ஸ்ரீஹரியாகிய உன்னுடைய பத்தினி மஹாலக்ஷ்மி ஆவாள் - என்பதால் திவ்யமான பத்னியாகிய மஹாலக்ஷ்மியின் கணவன் என்றும்; புருஷஸூக்தம் - யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்திதேவா: - எங்கு ஸாத்யர்கள் எனப்படும் புராணமானவர்கள் உள்ளனரோ - என்றும், தைத்திரீய உபநிஷத் - ஏதத் ஸாம காயந்நாஸ்தே – முக்தர்கள் ஸாமகானம் பாடியபடி - என்றும் கூறுவதால் நித்யஸூரிகளால் எப்போதும் கைங்கர்யம் செய்யப்பட்டபடி உள்ளவன் என்றும்;

**வ்யாக்யானம் –** “ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி”, “தத் ஸ்ருஷ்ட்வா தத் ஏவ அநுப்ராவிசத் தத் அநுப்ரவிச்ய ஸச்சத்யச்ச அபவத்” என்கையாலே ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டனாய்க் கொண்டு ஜகத்காரண பூதனென்றும்; “ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ ஏகோ நாராயண:” என்கையாலே ஸர்வாந்தர்யாமி யென்றும்; “அம்பஸ்ய பாரே புவநஸ்ய மத்யே நாகஸ்ய ப்ருஷ்டே மஹதோ மஹீயாந்” என்கையாலே வ்யூஹ ரூபேண வஸ்த்திதனென்றும்; “ப்ரஹ்மண்யோ தேவகீ புத்ரோ ப்ரஹ்மண்யோ மதுஸூதநோம்”, “அஜாயமாநோ

பஹுதா விஜாயதே” என்கையாலே அநந்தாவதார கந்தனென்றும்; “ஸயச்சாயம் புருஷே யச்சாஸாவாதித்யே”, “ய ஏஷோ அந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:” என்கையாலே ஸமஸ்த திவ்யதேச நிலையனென்றும்; “நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத்” என்கையாலே விஷ்ணு நாராயண வாஸுதேவாதி சப்த வாச்யனென்றும்; “பராத்பரம் புருஷமுபைதி திவ்யம்” என்கையாலே ஸர்வஸ்மாத் பரனென்றும்;

**விளக்கம்** - சாந்தோக்ய உபநிஷத் - ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி – “நான் பலவாகக் கடவேன்” என்று ஸங்கல்பம் செய்தது – என்றும், சாந்தோக்ய உபநிஷத் - தத் ஸ்ருஷ்ட்வா தத் ஏவ அநுப்ராவிசத் தத் அநுப்ரவிச்ய ஸச்சத்யச்ச அபவத் – அனைத்தையும் ஸ்ருஷ்டித்து, அனைத்தின் உள்ளிலும் புகுந்து, ஸத் மற்றும் த்யத் எனப்பட்டதுஎன்பதால் ஸுக்ஷ்ம்மாக உள்ள சித் மற்றும் அசித் ரூபமாக இருந்து ஜகத் காரணமக உள்லான் என்றும்; ஏஷ - என்றும் கூறுவதால் அனைத்திற்கும் அந்தர்யாமியாக உள்ளான் என்றும்; ஸுபால உபநிஷத் - ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ ஏகோ நாராயண: - அனைத்து ஜீவாத்மாக்களின் உள்ளிலும் அந்தர்யாமியாக உள்ளவனும், பாபங்கள் அற்றவனும், தேவனும் ஆகிய ஒருவன் நாராயணனே ஆவான் – என்பதால் அனைத்திற்கும் அந்தர்யாமியாக உள்ளான் என்றும்; மஹாநாராயண உபநிஷத் - அம்பஸ்ய பாரே புவநஸ்ய மத்யே நாகஸ்ய ப்ருஷ்டே மஹதோ மஹீயாந் – அவன் ஸமுத்திரத்திலும், புவனத்தின் நடுவிலும், மேல் லோகத்திலும் அளவற்ற மகிமையுடன் உள்ளான் – என்பதால் அவன் வ்யூஹரூபங்களில் நிலைநிற்பவன் என்றும்; ப் ப்ரஹ்மண்யோ தேவகீ புத்ரோ ப்ரஹ்மண்யோ மதுஸூதநோம் – தேவகியின் புத்திரனே ப்ரஹ்மம், மதுஸூதனனே ப்ரஹ்மம் – என்றும், புருஷஸூக்தம் - அஜாயமாநோ பஹுதா விஜாயதே – பிறப்பற்ற அவன் பல பிறவிகளில் அவதரிக்கிறான் – என்றும் கூறுவதால் அவன் பல அவதாரங்களை எடுத்தபடி உள்ளவன் என்றும்; தைத்திரீயம் - ஸயச்சாயம் புருஷே யச்சாஸாவாதித்யே – ஆதித்யமண்டலத்தில் எந்தப் புருஷன் உள்ளானோ அவனே ஆனந்தமயன் – என்றும், தைத்திரீயம் - ய ஏஷோ அந்தராதித்யே ஹிரண்மய: புருஷ: - ஸ்வர்ணமயமான எந்தப் புருஷன் ஆதித்யனின் நடுவில் உள்ளானோ - என்றும் கூறுவதால் அனைத்து திவ்யதேசங்களிலும் உள்ளவன் என்றும்;

நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத் – நாராயணனை உபாஸிப்போம், அனைத்திலும் நிறைந்துள்ள வாஸுதேவனாகிய அவனை வணங்குவோம், அந்த விஷ்ணு நம்மை ஒளிரச் செய்வானாக – என்பதால் விஷ்ணு, நாராயணன், வாஸுதேவன் போன்ற பல திருநாமங்களால் கூறப்படுபவன் என்றும்; பராத் பரம் புருஷம் உபைதி திவ்யம் – மிகவும் உயர்ந்த புருஷனும் திவ்யமானவனும் ஆகிய அவனை அடைந்து – என்பதால் அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளவன் என்றும்;

**வ்யாக்யானம்** – "ஏஷோணுராத்மா புருஷமபைதி திவ்யம்", "ஆராக்ரமாத்ரோ ஹ்யவரோபி த்ருஷ்ட:" என்கையாலே ப்ரத்யகாத்மா அணுவாயிருப்பானென்றும்; "நித்யாநாம் சேதநாநாம்" என்கையாலே நித்யனாயிருப்பானென்றும்; "போக்தா போக்யம் ப்ரேரிதாராம் ச மத்வா" என்கையாலே போக்தாவென்றும்; "ப்ருதகாத்மாநாம் ப்ரேரிராதம் ச மத்வ" என்கையாலே ஸர்வேச்வரனில் வேறுபட்டிருப்பானென்றும்; "தயோரந்யம் பிப்பலம் ஸ்வாத்வத்தி" என்கையாலே கர்ம பல போக்தாவென்றும்; "ப்ரஹ்மணேத்வாமஹஸ ஓம் இதி ஆத்மாநம் யுஞ்ஜீத" என்கையாலே பகவதநந்யார்ஹ சேஷபூதனென்றும்; "தமேவ வித்வாநம்ருத இஹ பவதி" என்கையாலே தாத்ருச ஜ்ஞாநத்தைக் கொண்டு பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தைப் பெறக் கடவனென்றும்; "ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வ ஜாதே" என்கையாலே அசித்து ஈச்வரனுக்கு க்ரீடா பரிகரமாயிருக்குமென்றும்; "ஆகாசாத் வாயு: வாயோரக்நி: அக்நோராப: அத்ப்ய: ப்ருதிவீ" என்கையாலே சதுர்விம்சதி தத்வாத்மகமாய் பரிணமிக்குமென்றும், "ம்ருத்திகேத்யேவ ஸத்யம்" என்கையாலே துச்ச வ்யாவருத்தமா யிருக்குமென்றும்; இப்படி தத்வ த்ரயத்தினுடையவும் ஸ்வரூப ஸ்வபாவாதிகளை இந்த அஜ்ஞாந வர்த்தகமான பூலோகத்திலே யதாவாக உபதேசித்து உபகரித்தவென்றபடி. புரத்தல் – காத்தல். அன்றிக்கே, இரண்டாம் யோஜனைக்கு அநுகுணமாக, "பொருளைத் துரத்திந்தப் பூதலத்தே மெய்யைப் புரக்கும்" என்றதுக்கு ஸ்வ ஸ்வாதந்த்ர்யாதிகளை ஸ்வ உபதேசத்தாலே ஓட்டிவிட்டு, இந்த பூதலத்தில் ஸதைகரூபனாய் ஸத்ய சப்த வாச்யனான ஆத்மாவை ரக்ஷித்தருளினாரென்று பொருளாகக் கடவது.

**விளக்கம்** - ஏஷோணுராத்மா புருஷம் உபைதி திவ்ய: - அணுவிலும் ஆத்மாவாக உள்ள உயர்ந்த புருஷனும் திவ்யமானவனும் ஆகிய அவனை அடைந்து – என்றும், ஆராக்ரமாத்ரோ ஹ்யவரோபி த்ருஷ்ட: - என்றும் கூறுவதால் சரீரத்தினுள் இருக்கின்ற ஆத்மா அணு அளவாகவே உள்ளவன் ஆவான் என்றும்; நித்யாநாம் சேதநாநாம் – நித்யர்களாக உள்ள சேதநர்களின் நடுவில் உள்ள நித்யமான சேதநன் – என்பதால் எப்போதும் உள்ளவன் என்றும்; ச்வேதாஸ்வதர உபநிஷத் - போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா – அனுபவிப்பவன், அனுபவிக்கப்படும் பொருள், இவர்களை நியமிப்பவன் - என்பதால் அனுபவிப்பவன் என்றும்; ச்வேதாஸ்வதர உபநிஷத் (1-6) - ப்ருதக் ஆத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா – ஒவ்வொரு ஆத்மாவிலும் இருந்தபடி நியமித்து - என்பதால் ஸர்வேச்வரனைக் காட்டிலும் வேறுபட்டவன் என்றும்; முண்டக உபநிஷத் – தயோரந்ய: பிப்பலம் ஸ்வாது அத்தி – அந்த மரத்தில் இருந்தபடி அத்திப்பழம் என்னும் பலனை உண்டபடி - என்பதால் கர்மபலனை அனுபவிப்பவன் என்றும்; ந்யாஸ வித்யை - ப்ரஹ்மணேத்வாமஹஸ ஓம் இதி ஆத்மாநம் யுஞ்ஜீத – ஓம் என்னும் ஆத்மாவில் இன்புற்றபடி - என்பதால் பகவானைத் தவிர்த்து வேறு யாருக்கும் அடிமை அல்லன் என்றும்; புருஷஸூக்தம் – தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி – இங்கேயே மோக்ஷ ஆனந்தத்தை அனுபவிக்கிறான் - என்பதால் உண்மையான ஞானத்தைப் பெற்று, உயர்ந்த புருஷார்த்தமாக உள்ள மோக்ஷத்தை அடைவான் என்றும்; ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வ ஜாதே – அந்த மரத்தில் இரண்டு பறவைகள் – என்பதால் அசித் வஸ்துக்கள் அனைத்தும் ஈச்வரனுடைய லீலைக்கு ஏற்றதாக இருக்கும் என்றும்; ஆகாசாத் வாயு: வாயோரக்நி: அக்நோராப: அத்ப்ய: ப்ருதிவீ – ஆகாசத்திலிருந்து வாயு, வாயுவிலிருந்து அக்னி, அக்னினியிலிருந்து நீர், நீரிலிருந்து பூமி - என்பதால் இருபத்து நான்கு தத்வங்களாக அசித் வஸ்துக்கள் வெளிப்படும் என்றும்; ம்ருத்திகேத் ஏவ ஸத்யம் – மண் உண்மையானது - என்பதால் சூந்யம் என்பதற்கு விரோதமாக இருக்கும் என்றும்; இப்படியாக சித், அசித் மற்றும் ஈச்வரன் ஆகிய மூன்று தத்துவங்களின் ஸ்வரூபம் மற்றும் ஸ்வபாவம் ஆகியவை குறித்து, அறியாமையில் மூழ்கியபடி உள்ள இந்த உலகத்தில், உள்ளது உள்ளபடி உபதேசித்து உதவினார் என்று கருத்து. அல்லது இப்படியாக இரண்டாவது விதமாகக் கூறப்பட்ட பொருளுக்கு ஏற்றபடி "பொருளைத் துரத்திந்தப் பூதலத்தே மெய்யைப் புரக்கும்", என்பதற்கு தாங்கள்

சுதந்திரமானவர்கள் என்றிருந்தவர்களை தனது உபதேசங்கள் மூலம் விரட்டிய பின்னர், இந்த உலகத்தில் ஸத் என்பதாக உள்ளதும், ஸத்யம் என்று கூறப்படுவதும் ஆகிய ஆத்மாவைக் காப்பாற்றினார் என்று பொருள் கூறலாம்.

**வ்யாக்யானம்** – (இராமானுசன் நிற்க) எம்பெருமானார் வேத மார்க்க ப்ரதிஷ்டாபநாச்சார்யராய் உபயவேதாந்தாசார்யராய், திருத்துக்கைக்கு ஆராகிலும் ஆளுண்டோவென்று "எதிர் சூழல் புக்கு" வழி பார்த்து நிற்கச் செய்தே, (வேறு நம்மையுய்யக் கொள்ள தெய்வம்) அநாதி பாப வாஸனா தூஷிதாசேஷ சேமுஷீகராய் அவர் பக்கல் ஸஜாதீய புத்தியைப் பண்ணி, அவருபதேசத்துக்கு இசையாதே எங்களை உஜ்ஜீவிப்பிக்கைக்கு ஸமர்த்தமான வேறொரு தைவம். (இங்கியாதென் றுலர்ந்து) இந்த பூமியிலே ஏதோவென்று தேடித்தேடித் தடுமாறி, அப்படிப்பட்ட தைவத்தை லபியாதே மிகவும் உடம்புலர்ந்து க்லேசித்து, (அவமே ஐயப்படா நிற்பர்) இவ்விஷயம் எனக்கு உத்தேச்யமென்று பற்றி உஜ்ஜீவித்துப் போகைக்குறுப்பான யதா ஜ்ஞாநத்தை லபிக்கப் பெறாதே உங்களுக்கு உஜ்ஜீவநகரமில்லையென்று சொன்னாலும், வ்யர்த்தமே இனி நமக்கு ரக்ஷகராவா ரொருவருமில்லையென்று ஸம்சயப்படா நின்றார்கள். ஐயம் – ஸம்சயம். (வையத்துள்ளார் நல்லறிவிழந்தே) பூலோகத்திலே யிருக்கிற சேதநர்கள் நல்ல பரிசுத்த ஜ்ஞாநத்தை யிழந்து போனார்களே, அத்தாலே நம்முடைய உபதேசமும் வெறிதே தலைக்கட்டிற்று. "ஸம்சயாத்மா விநச்யதி" என்று இவர்கள் நசித்துப் போனார்களே, ஐயோ!" என்று ஸர்வ பூத ஸுஹ்ருதராகையாலே அவர்களுக்காக அமுதனார் அவஸாதப்படுகிறார் காணும்.

**விளக்கம் -** (இராமாநுசன் நிற்க) - இப்படியாக வேதமார்க்கத்தினை நிலையாக நிறுத்தி, ஆசார்யனாக இருந்து, உபயவேதாந்தங்களை உபதேசிப்பதற்கு எம்பெருமானார், "நம்மால் திருத்தப்படவேண்டியவர்கள் யாரேனும் இந்த உலகில் உள்ளனரா" என்று திருவாய்மொழி எதிர்பார்த்தபடி நிற்கிறார். இப்படி இவர் உள்ளபோது, (வேறு நம்மையுய்யக் கொள்ள தெய்வம்) – எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள பாபவாஸனை காரணமாகத் தாழ்ந்த பலவற்றையும் எஜமானர்கள் என்று கொண்டு, அவர்களிடம் தங்கள் புத்தியை நிலைநிறுத்தி, எம்பெருமானாருடைய உபதேசத்திற்கு அடிபணியாமல், தங்களைக்

காப்பாற்றுவதற்கான சாமர்த்தியம் நிறைந்த வேறு ஒரு தெய்வம். (இங்கியாதென்றுலர்ந்து) - இந்தப் பூமியில் ஏதேனும் உண்டோ என்று தேடியபடி, அது கிடைக்காமல், சரீரம் தளர்ந்து, துன்பம் அடைந்து. (அவமே ஐயப்படா நிற்பர்) – எம்பெருமானார் என்னும் இந்த விஷயமே நமக்கு ஏற்றது என்று அவரிடம் அடிபணிந்து, கரையேறுவதற்குக் காரணமாக உள்ள உண்மையான ஞானத்தைப் பெறாத உங்களுக்கு, இனி பிழைக்க இடம் இல்லை என்று உபதேசிப்பதும் வீணே ஆகும். இனி நம்மைக் காப்பாற்றுபவர்கள் யாரும் இல்லை என்று சந்தேகம் கொண்டபடியே இவர்கள் இருப்பார்கள் என்பதால் வீணே ஆகும் என்று கருத்து. (வையத்துள்ளார் நல்லறிவிழந்தே) – இப்படியாக இந்த உலகில் உள்ளவர்கள் சிறந்ததும், தூய்மையானதும் ஆகிய ஞானத்தை இழந்து நிற்கிறார்களே, இதன் காரணமாக நம்முடைய உபதேசமும் வீணாகவே முடிந்தது. கீதை (4-40) - ஸம்சயாத்மா விநச்யதி – சந்தேகம் கொண்டவன் அழிவான் – என்பதற்கு ஏற்ப இவர்கள் அழிந்தார்கள். அனைத்து உயிர்களின் நன்மையைக் கருத்தில் கொள்ளும் என்ணம் கொண்டவர் என்பதால் அமுதனார் அவர்களுக்காகத் தவிக்கிறார்.

ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்

...தொடரும்